# புலிகள் முழுத் திறமையுடன் போராடுகின்றனர்!

23-7-1991

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 7 இதழ்: 162
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-7-1991

## இராணுவ அதிகாரி தகவல்

[மணிலா]
ஆனையிறவு முகாமைக் கைப்பற்றவும், அந்த முகாமை அணுகமுனையும் ராணுவத்தை தடுக்கவும் விடுதலைப்புலிகள் தம்மிடமிருக்கும் முழுத் திறமையையும் திரட்டி கடுமையான தாக்குதலைத்தொடுத்துள்ளதாக கொழும்பில்
(4ம் பக்கம் பார்க்க)

## கவச வாகனம் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]
முள்ளியான் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் மீது நேற்று விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் இராணு 'சலாடின்' கவச வாகனம் முற்றுக
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் சிறிதளவே முன்னேறியிருக்கிறது

[லண்டன்]
ஆனையிறவு முகாமை மீட்க அனுப்பப்பட்ட ராணுவத்தினர் கடந்த சில நாட்களில் ஒரு சில நூறு மீற்றர்களே முன்னேறி இருப்பதாக சண்டை நடைபெறும் இடச்
(4-ம் பக்கம் பார்க்க)

# ● புல்லாவெளி - முள்ளியான் இருநாள் சமரில்

# 100 படையினருக்கு மேல் பலி

# 42 சடலங்கள் புலிகளால் மீட்பு!

## பல துருப்பினரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)
கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் கடந்த இரு நாட்கள் நடந்த உக்கிரமான மோதலில் நூற்றுக்குமதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன் 300 பேர் காயமடைந்தனர். விடுதலைப்புலிகள் தரப்பில் 28 போராளிகள் களப்பலியானதுடன் பல ஆயுதங்கள், 42 இராணுவ சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கட்டைக்காடு, வெற்றிலைக் கேணிப் பகுதிகளிருந்து மும்முனைத்தாக்குதலின் உதவியுடன் முள்ளியான், புல்லாவெளி ஆகிய பகுதிகளை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை மேலும் முன்னேறவிடாது புலிகள் சளைக்
(4 ம் பக்கம் பார்க்க)

## 28 வேங்கைகள் வீர மரணம்

(யாழ்ப்பாணம்)
வெற்றிலைக்கேணி அருகே நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மோதலில் 28க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி மோதலில் வீரமரணமடைந்த சில வீரவேங்
(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னேறும் படை மோசமான நிலையில்

(கொழும்பு)
ஆனையிறவை நோக்கி முன்னேறும் படையினரின் முயற்சி விடுதலைப்புலிகளின் கடுமையான எதிர்ப்பால் மோசமானதொரு நிலைக்குள்ளாகியுள்ளதாக கொழும்பில் இராணுவ
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசின் மிகையான தகவல்

[பெர்லின்]
விடுதலைப்புலிகளின் உயிர்ச்சேதங்கள் பற்றி இலங்கை அரசு வெளியிடும்எண்ணிக்கை பெரிதுபடுத்தப்பட்டவை.

இவ்வாறு புலிகள் தரப்பில் குரல்தரவல்ல ஒருவர் நேற்று ஜெர்மன் தலைநகரில் கூறினார்.

அரசு கூறுவதுபோல், தான் இழக்கும் ஒவ்வொரு இராணுவத்திற்கும் 10 புலிகள் கொல்
[4-ம் பக்கம் பார்க்க]

## இராணுவ சடலங்கள் —
## மக்கள் பார்வைக்குப் பின் அரசிடம் ஒப்படைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
புல்லாவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட 42 இராணுவத்தினரின் சடலங்களும், ஆயுதங்களும் இன்று காலை 9-30 மணி முதல் முத்திரைச் சந்தையில் பொது மக்களின் பார்வைக்கு வைக்ப்பபடவுள்ளன.
(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவுமுகாம்முற்றுகை தொடர்ந்து முன்னேற்றம்

### எந்நேரமும் புலிகள் வசமாகும்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றியுள்ள விடுதலைப் புலிகளின் முற்றுகையில் தற்போது பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்லன.

இம்முகாம் மிக விரைவில் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்து விடும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும், முகாமுக்குள் முடங்கிக் கிடக்கும் இராணுவத்தினரும், அங்கு படுகாயமடைந்துள்ள படையினரும் தம்மை விரைவில் மீட்கும்படி 'வயர்லஸ்' மூலம் மேலிடத்துக்கு அவலக்குரல் கொடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.
[4-ம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் 10 சிப்பாய் பலி

### பல ஆயுதங்கள் மீட்பு
### இரு வேங்கைள் களப்பலி

[வவுனியா]
வவுனியாப் பகுதியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை நடத்திய திடீர்த்தாக்குதலில் ஐந்து காவலரண்கள் முற்றுகத் தகர்கப்பட்டதுடன், பத்து இராணுவத்தினரும் கொல்லப்படடனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர்.

நேற்று அதிகாலை 1-30 மணியளவில் வவுனியா பகுதியிலுள்ள சூடுவெந்த புலவுக்கும் சின்னக்குளத்திற்கு
[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். தபால் சேவை இன்று முதல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)
ஊரடங்குச் சட்டத்தினல் ஸ்தம்பிதமடைந்திருந்த தபால் சேவை இன்று செவ்வாய்க்கிழமை முதல் நடைபெறவுள்ளது.
(4ம் பக்கம் பார்க்க)

## ஆலோசனை பெற கொப்பேகடுவ கொழும்பு விரைவு!

(கொழும்பு)
ஆனையிறவை மீட்கும் முயற்சிக்கு தலைமை தாங்கும் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ அவசரமாக கொழும்பு சென்றுள்ளதாக நேற்று மாலை ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.
(4ம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி, பளை நோக்கி ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
கடந்த இரண்டு தினங்களாக இயக்கச்சி, பளை ஆகிய இடங்களை நோக்கி கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப்
(4ம் பக்கம் பார்க்க)

## சிறில் ரணதுங்கா முல்லை. விஜயம்

[கொழும்பு]
பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்காவும், மேலதிகச் செயலாளர் எயார் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோவும் முல்லைத்தீவு பகுதிக்கு விஜயம் செய்தனர்.

## வரி விளம்பரம்

### தேவை

யந்திரம் நல்ல நிலையில் உள்ள (B. M C.) லொறி 26 சிறி - 28 சிறி தேவை. ந. சிற்றம்பலம், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி-5018]

### தவறிவிட்டது

காரைநகர் பலகாடு வே. குமாரசாமி என்பவரின் அடையாள அட்டை இலக்கம் 17 1580 185 V. யாழ். நகரில் 22-07-91 அன்று றட்ணம் பார்மசியில் பொருட்கள் வாங்கும்பொழுது கணக்குத் துண்டுகள் அடங்கிய மணிபேர்சுடன் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் றட்ணம் பார்மசியில் அல்லது வே. குமாரசாமி C/o க. இராசதுரை, செட்டியா மடம், வட்டுக்கோட்டை என்ற முகவரியில் தயவுசெய்து கொடுத்து உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(சி-5019)


# ★ ஆனையிறவில் 13ம் திகதி யுத்தத்தில் 46 வீரவேங்கைகள்

# வீரமரணமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போரில் 13ம் திகதி யுத்தத்தில் 46 புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். வீரமரணமடைந்த வேங்கைகள் விபரம் வருமாறு;

1. மன்சூர் (கதிரிப்பிள்ளை செல்வகுமார் - நாகர்கோயில் வடக்கு, பருத்தித்துறை)
2. நார்த்தீபன் (அழகராசா புஸ்பராஜா - சுப்பர் மடம், பருத்தித்துறை)
3. சேசரி (பாலகிருஷ்ணன் அரசசேசரி - தம்பசிட்டி, புலோலி மேற்கு, புலோலி)
4. டக்ளஸ் (விக்னேஸ்வரராஜா சதீஸ்வரன் - ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்)
5. சுரேஸ் (கணேஸ் புலேந்திரன் - பிரான்ஸ்கா, தாழையடி)
6. ஐஸ்ரின் (கிருஷ்ணபிள்ளை சுதாகர் - கொற்றுவத்தை, அல்வாய் மேற்கு)
7. சசி (சுப்பிரமணியம் குமரன் - அல்வாய் கிழக்கு, அல்வாய்)
8. கரன் (பொன்னம்பலம் ஜெயக்குமார் - புதுதோப் பழங்கன், அச்சுவேலி வடக்கு)
9. அகிலன் (கதிர்காமு பாலச்சந்திரன் - போக்கருப்பு முள்ளியான்)
10. அம்பழன் (சுந்தரலிங்கம் ஜெயகாந்தன் - தபாற்கந்தோர் வீதி, கிரான்)
11. பரன் (தியாகராஜா மோகன்ராஜா - 9, பெரியமடு, மன்னார்)
12. தனேந்திரன் (துரைசிங்கம் சிறீகரன் - கல்லாறுவத்தை, மரிசாலின்கூடல் இளவாலை)
13. நடா (தங்கராசாபாஸ்கரன் - சித்திவிநாயகர் எதிர் றோட், தம்புறுவில் அம்பாறை)
14. லோகி (வேலாயுதம் சிவகுமார் - 1-ம் கட்டை புலோலி தெற்கு, பருத்தித்துறை)
15. ஜெகன் (நடராசா தவராசா - பூநகரி)
16. கணேஸ் (இராஜதுரை ஜெயரட்ணம் - தண்ணீரூற்று, முள்ளியவளை)
17. டொனட்ல் [இராமசாமி புவனகுமார் - இரத்தினபுரம், கிளிநொச்சி]
18. கஜன் (சின்னையா - சீவரத்தினம் - அளவெட்டி வடக்கு, அளவெட்டி)
19. மஞ்சுதன் [சிவமாலை குகநேசன் - புளியங்குளம், வவனியா)
20. குலசிங்கம் (இராசலிங்கம் றேமன் - 2ம் வட்டாரம் கண்டபொடி, வாகரை மட்டக்களப்பு.
21. காசி [மரியான்ரி ஞானம் - நெகிழங்குளம், மாங்குளம்]
22. அங்குதன் (நடராஜா ராஜ்குமார் - 4ம் கட்டை, இணுவில் கிழக்கு]
23. மெரடோனா (கைலாசபிள்ளை சந்திரகுமார் - ஆலங்கேணி, கிண்ணியா]
24 திலகன் (அருணாசலம் சிவநாதன் - 14ம் கொலனி, மண்டூர்]
25. மருது (இராமசாமி மருதலிங்கம் - L. B, முத்தையன் கட்டு, ஒட்டிசுட்டான்)
26. வரதன் (வாரகன்] (சின்னத்துரை சர்வகுமார் - பேத்தவாய் வடக்கு, அளவெட்டி]
27. யுகந்தன் [நடராசா பத்மநாதன் - 16ம் கட்டை, கொக்குத்தொடுவாய்)
28. அப்பன் [ஜோன் செமஸ்ரா - புதுக்குடியிருப்பு விகாரை, திருமலை]
29. பிரசாந் [கந்தசாமி மனோகரன் - முட்டுச்சேனை, மூதூர்.
30. பார்த்தீபன் (டொமினிக் கெனியூட் - 5-ம் வட்டாரம், பேசாலை மன்னார்]
31. நாகராசா (முத்துராஜா - புதியகலணி, கண்டி வீதி மாங்குளம்)
32. கீரோ.
33. அர்ச்சனா
34. தமயந்தி [வைத்தியநாதன் கமலயோகினி- ஆத்திமோட்டை, இலுப்பைக் கடவை].
35. விஞேசா [சுவாம்பிள்ளை, விஜிதா- 21, 1ம் குறுக்குத் தெரு, பாசையூர்].
36. தவமலர் [ஈஸ்வரபாதம் மஞ்சுளாதேவி - மருதங்கேணி வடக்கு, தாழையடி].
37. நேதாஜி [சிவஞானம் விஜயகுமாரி - ஓடைவெளி, நெடுங்கேணி]
38. நிசா [சின்னத்தம்பி விஜயகுமாரி - [சிங்கநகர், புலோலி தெற்கு]
39. கவி [சீவரட்ணம் ராஜி- ஆதியாமலை, உடுப்பிட்டி]
40. அஞேஜா [லோகநாதன் சிறீகலா -இராசபுரம், கரடியனாறு, மட்டக்களப்பு]
41. மாலா (யாக்கோப் சில்வா ரோஸ்மங்கலிப்பா- பூக்குளம், முள்ளிக்குளம், புத்தூர்)
42. கண்மணி (சரோஜினி முருகையா-சின்னக்கடை, மன்னார்)
43. மீனாட்சி (ராஜரட்ணம் கலைச்செல்வி- 1ம் வட்டாரம், முள்ளியவளை)
44. அமுதப்பிரியா (பரமலிங்கம் அகிலகுமாரி- 4ம் வட்டாரம், புங்குடுதீவு)
45. பூபாலினி (நாகரத்தினம் பரமேஸ்வரி-நியூ அம்பாள் பேக்கரி, செல்வபுரம், முல்லைத்தீவு)
46. குயின்சி (தர்மராசா தயாநிதி-அராலி தெற்கு, வட்டுக்கோட்டை)

## சைவசமய வளர்ச்சிக்கு வாசிப்பு நிலையம் அமைக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சைவ சமய வளர்ச்சியில் நூலகங்களின் பங்கு குறித்து அண்மையில் 'சைவ இளைஞர் மன்றம்' இதன் நிறுவனரும், தலைவருமான பொறியியலாளர் திரு. ஏ. என். யோகநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தியுள்ளது.

இக்கூட்டத்தில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின்படி; சைவசமய வளர்ச்சிக்கு உதவும் வகையில் நூலகமொன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இதற்கென சைவசமயம் சம்பந்தமான நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்களை பெற்று 67, ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள 'வாசிப்பு நிலையத்தில்' நூலகம் அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பொன்னாலை மக்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை

(சித்தன்கேணி)

பொன்னாலையில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு விசேட நிவாரணம் வழங்குமாறு அப்பகுதி பொதுமக்களும் பொது நிறுவனங்களும் உதவி அரசாங்க அதிபரிடமும் அரசாங்க அதிபரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வலந்தலைச்சந்தியிலுள்ள இராணுவத்தினர் அடிக்கடி மேற்கொள்ளும் ஷெல்தாக்குதலினால் பொன்னாலையில் உள்ள மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தற்போது வசித்து வருகின்றனர்.

இவர்களுக்கும் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் மூன்று கட்ட நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள், பொது நிறுவனங்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்திடமும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (137)

## நிவாரணம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அடைக்கலநாயகி ஆலய குருமனையில் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணப் பொருட்கள் மறு அறிவித்தல் வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. [59]

## இன்று

[யாழ்ப்பாணம்]

களத்தில் போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் போராளிகளுக்கு தெய்வஆசி வேண்டி இன்று மாலை யாழ்ப்பாணம் நவீன சந்தை ஞானவைரவர் ஆலயத்தில் விசேட அபிஷேகம் கிரகசாந்தி நடைபெறும். [எஸ்]

## ஷெல் தாக்குதல்

(பண்டத்தரிப்பு)

காரைநகர் வலந்தலை இராணுவ முகாமிலிருந்து அடிக்கடி பொன்னாலை மூளாய் ஆகிய இடங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது நேற்று இரவும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் தனியார் லொறிகளை வாடகைக்கு அமர்த்தி கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட உணவுப் பொருட்களுடன் மண்ணெண்ணையும் கொண்டுவரப்பட்டு அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தால் வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைக்கு $1\frac{1}{4}$ லீற்றர் மண்ணெண்ணையை விநியோகித்து வருகிறது.

அத்துடன் சீனி, மாவு, தேங்காய்எண்ணை என்பவற்றையும் விநியோகிக்கிறது. (56)

## வருடாந்த உற்சவம்

[பண்டத்தரிப்பு]

சில்லாலை தெற்கு புனித யாகப்பர் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 16-ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 25ம்திகதியன்று திருப்பலி, திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் உற்சவம் முடிவடையும். பூசைகளை சில்லாலைப் பங்குத் தந்தை அருட்திரு. பொனிபஸ் அடிகளார் நிறைவேற்றுவார் [72]

## விபத்தில் பலி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பை சேர்ந்த அந்தோனிமுத்து மரியசீலன் என்ற வாலிபர் சவுதி அரேபியாவில் இடம் பெற்ற விபத்து ஒன்றில் சிக்கிபலியானார்.

## அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் வந்திறங்கிய ஸ்ரீ லங்கா இராணுவத்துடன் நேரடிமோதலில் மரணித்த மாவீரர்களின் புகழுடல்கள் வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் பொதுமக்களின் விசேட அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. (152]

## விசேட அபிஷேகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டுவாசல் அம்பாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை விசேட அபிஷேகம் பூசைகள் ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

ஆனையிறவுஇராணுவமுகாம் போரில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் ஆத்மா சாந்தியடையவும் காயமடைந்த வீரவேங்கைகள் பூரண சுகம்வேண்டியும், போர்க்களத்தில் போராடும் வீரவேங்கைகளுக்கு ஆத்ம பலம்வேண்டியும் பூசைகள், ஆராதனைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## ஆரம்பம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் உள்ள சகல பாடசாலைகளும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (52)


லயஞான திலகம் அமரர் என். ஆர். சின்னராசா
அவர்களின் புதல்வர்கள்

**என். ஆர். எஸ். ரவீந்திரன்**
அவர்களும்
**என். ஆர். எஸ். சுதாகரன்**
அவர்களும்

தம் தந்தையாருக்கு அஞ்சலியாகச் செய்யும்

## நாதோபாசனை

இடம்: இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயில்.

காலம்: ஆடி 10, வெள்ளிக்கிழமை (26-07-91) பிற்பகல் 3 மணி.

பங்குபற்றும் கலைஞர்கள்:

| நாதஸ்வரம்: | தவில் |
|---|---|
| கே. ஆர். சுந்தரமூர்த்தி | கே. ஆர். புண்ணியமூர்த்தி |
| வி. கே. கானமூர்த்தி | என். ஆர். எஸ். ரவீந்திரன் |
| வி. கே. பஞ்சமூர்த்தி | என். ஆர். எஸ். சுதாகரன் |

★ மேற்படி நிகழ்ச்சியிற் கலந்துகொண்டு இளங்கலைஞர்களை ஆசிர்வதிக்கும்படி இசையபிமானிகளை வேண்டுகிறோம்.

இங்ஙனம்
இசை ஆர்வலர்கள்.

[சி-5017]


## இராசி பலன்

**23 - 07 - 1991**

**செவ்வாய்க்கிழமை**

சுவாதசி மாலை 6-27 வரை, கேட்டை மாலை 6-05 வரை, இராகுகாலம் மாலை 4-32 முதல் 10-32 வரை, சுபநேரம் காலை 10-32 முதல் பகல் 12-02 வரை, சித்தாமிர்தயோகம்.

மேடம்: குறைகேட்டல், இனசனப்பகை, தொழில் குழப்பம்.

இடபம்: வாக்குவாதம், மனத்தாங்கல், நோய் வாட்டும்.

மிதுனம்: குடும்ப மகிழ்ச்சி, அயலவர் உதவி, பணவரவு.

கடகம்: மகான் தரிசனம், சுபகாரிய செலவு, தொழில் லாபம்.

சிங்கம்: விரோதிகள் துன்பம், குடும்பப்பிரிவு, அலைச்சல்.

கன்னி: மனக்குறை, அவசர கோலம், குடும்பக் கஸ்டம்.

துலாம்: தொழில் பாராட்டு, காரிய பலிதம், சுபசெய்தி.

விருச்சிகம்: அந்நியவாசம், குடும்பக் கவலை, நண்பர் தொல்லை.

தனுசு: விரும்பியவை அடைதல், குடும்ப சுகம், மகிழ்ச்சி.

மகரம்: உதவியால் உபத்திரவம், வழித்தொல்லை, மனக்குறை.

கும்பம்: தொழில் மாற்றம், அதிகாரிகள் உதவி, வெற்றி.

மீனம்: புத்திரர் பெருமை, தாய்வழி உதவி, உல்லாசம்.

: ஜோஸ்யர்

# கோவளம் வெளிச்சவீட்டில் படையினர் காவலரண்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கோவளம் வெளிச்சவீட்டு உச்சியில் படையினர் காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர். சடந்த சனிக்கிழமை 'ரூபவாஹினி'யில் ஒளிபரப்பான நிகழ்ச்சி ஒன்றில் இது காண்பிக்கப்பட்டது.

சுமார் 120 அடி உயரமுள்ள இந்த வெளிச்சவீட்டின் உச்சியிலேயே இக்காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கடற்படையினர் ஒருவித பீரங்கி ஒன்றையும் பரிசோதிப்பதும் அந்நிகழ்ச்சியில் காண்பிக்கப்பட்டது,

[சி]

# வடபகுதியில் புலிகளுடனான யுத்தத்தில் 14 ராணுவ அதிகாரிகள் பலி

[கொழும்பு]

வடபகுதியில் கடந்த இருபது நாட்களில் இடம்பெற்ற கடும் யுத்தத்தில் இராணுவ தரப்பில் 14உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை அரசு தரப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனையிறவு - வெற்றிலைக்கேணி கட்டைக்காடு மோதலில் 10 உயர் அதிகாரிகளும், மன்னாரில் இருவரும். மணல்ஆறில் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்ட அதிகாரிகளில் இருவர் மேஜர் தரத்திலும், இருவர் லெப். கேர்ணல் தரத்திலும் அடங்குவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இம்மோதலில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் கூறியுள்ளன.

[சி]

# மக்களின் போர்க்கால உதவிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பலஇடங்களில் ஆனையிறவுப் போர்க்களத்தில் போரிடும் போராளிகளுக்கு பொதுமக்கள் தாமாகவே முன் வந்து பல உதவிகளைச் செய்கின்றார்கள்.

சில அமைப்புக்கள் வீடு வீடாகச் சென்று போர்க்களத்தில் காயப்பட்ட வீரர்களுக்கு மெத்தைகள், படுக்கை விரிப்புகள், தலையணைகள் சேகரித்துக் கொடுக்கிறார்கள்

போராளிகள்போரில்வெற்றி பெறவேண்டும் என்பதற்கு பல கோவில்களில் பொதுமக்கள் அர்ச்சனைகள் செய்து பிரார்த்திக்கின்றார்கள்.

பொதுமக்கள் உணவுகள், இளநீர்கள் கொடுத்து இந்தப் போரை வெல்லவேண்டும் என்பதற்காக வேங்கைகளுக்கு உற்சாகமூட்டுகிறார்கள்.

காப்பரண்கள் அமைப்பதற்கு மண்வெட்டி, சாக்கு, பிக்கான், சவள் போன்ற உபகரணங்களை கொடுத்து ஒட்டுமொத்தமாக இந்தப் போர் வெல்லும் என மனவுறுதியோடு உதவிகள் வழங்குகின்றார்கள். (152)

## விசேட அபிஷேகம்

[யாழ்ப்பாணம்)

ஆனையிறவு போராளிகளின் வெற்றிக்காகவும் போரில் காயமடைந்தவர்களின் உடல் நலத்துக்காகவும் வீரமரணமடைந்த மாவீரர்களின் ஆத்மாசாந்திக்காகவும் நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயத்தில் 24-ம் திகதி புதன் கிழமை காலை 10மணியளவில் விசேட அபிஷேகமும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும்.

## போராளிகளுக்கு உணவு வகைகள்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவுப்போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு உலர் உணவுவகைகள் அனுப்பி வைப்பதற்கு நாவற்குழி மாதர் அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று நாவற்குழி மக்கள் கொடுத்துதவிய பொருட்களையும் பணத்தையும் கொண்டு 600 பயற்றம் உருண்டைகளும், 200எள்ளுப் பாகுகளும், 12 வீவாப்போத்தல்களையும் மேற்படி சங்கத் தலைவி சிற்றூர் அலுவத்தலைவர் மூலம் தென்மராட்சி வட்டவை செயலாளரிடம் கை அளித்தார்.

# கட்டைக்காடுப் பகுதிகளிலிருந்து 3000 குடும்பங்கள் இடம்பெயர்வு

(பருத்தித்துறை]

மருதங்கேணி, வத்திராயன், தாழையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போக்கறுப்பு, கோவில் வண்ணான்குளம்பகுதிகளைச்சேர்ந்த சுமார் 3000 குடும்பங்கள் இடம்பெயர்ந்து குடத்தனை, அம்பன், நாகர் கோவில் பகுதிகளிலும் பருத்தித்துறை, வல்லிபுரம் புலோலிப்பகுதியிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இப்பகுதிகளில்உள்ளபாடசாலைகள், அரசாங்க கட்டிடங்கள் ஆலயமடங்கள் தனியார் வீடுகளில் இவ் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தஞ்சம்புகுந்தவர்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் போன்றன நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன.

இடம்பெயர்ந்து தஞ்சம் புகுந்துள்ளவர்களுக்கான 10ம் கட்ட உலர்உணவு நிவாரணங்களை வடமராட்சிகிழக்கு ப. நோ. கூ. சங்கம் தனது கிளைகளான குடத்தனை, அம்பன், நாகர்கோவில் கிளைகள் மூலம் வழங்கிவருகின்றது.

(52)

# அரச திணைக்கள, பாடசாலை கட்டடவேலை யாவும் நிர்மாணத்துறையிடம் ஒப்படைப்பு

[கொழும்புத்துறை]

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்கத்திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு உரிய கட்டடங்களைநிர்மாணிக்கும் சகல பொறுப்பும் நிர்மாணத்துறைத் திணைக்களத்திடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது வரை இயங்கிய கட்டடத்திணைக்களத்தைக் கலைத்து நிர்மாணத்துறைத் திணைக்களம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திணைக்களம் மாகாணசபையின்நேரடிக்கண்காணிப்பில் இயங்கும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைப் பொறுத்தவரையில் யாழ். பல்கலைக்கழகம், யாழ் போதனாவைத்தியசாலை தவிர்ந்த ஏனைய அரச கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு நிர்மாணத்துறைதிணைக்களம் இனிப்பொறுப்பாக இருக்கும் என்று திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர்திரு. சொ.பரம்சோதி தெரிவித்துள்ளார். [154)

# களப்பலியான வீரவேங்கைகளுக்கு மக்கள் அஞ்சலி

[வேலணை]

ஆனையிறவு மோதலில் வீரமரணத்தை தழுவிக்கொண்ட மாவீரர்களான யஸ்ரின் ரேய் பபியன் (டயஸ்) கரம்பன் என்பவரும், நெடுந்தீவைச்சேர்ந்த கட்டப்பொம்மன் என்ற இரு மாவீரர்களினது புகழுடம்புகள் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் மண்கும்பானில் உள்ள தீவகச் செயலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளுக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

இதன்பின் ஊர்வலம் ஆரம்பமாகி புங்குடுதீவுக்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு மகாவித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பின்னர் வேலணை துறையூர் ஐயனார் ச. ச. நிலையத்திலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் ஊர்வலமாக வேலணை, சாட்டி மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. (75)

0 0 0 0

[பண்டத்தரிப்பு]

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணமடைந்த மூன்று போராளிகளின் பூதவுடல்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் சங்கத்தலைவர் திரு. வை செந்தில்நாதன் தலைமையில் வந்து தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட பலர் வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினார்கள். நியூட்டன் (காரைநகர்), முகுந்தன் (தாவடி) யாசீர் (மிருசுவில்) ஆகியோரின் புகழுடம்புகள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. [72]

## பூட்டப்பட்ட சைக்கிள் 'திருட்டு

(யாழ்ப்பாணம்)

பூட்டப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் யாழ். ரயில் நிலைய தென் ஒழுங்கையில் வசிப்பவரும், தீவுப்பகுதியிலிருந்து அகதியாக வந்தவருமான சிவப்பிரகாசம் சற்குணம் என்பவரின் வீட்டில் நடந்துள்ளது.

திருடர்களால் சைக்கிள் வீட்டின்முன் தலைவாசலில் இருந்து தூக்கியெடுத்துச்செல்லப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## ஊர்காவற்றுறை

# உதவி அரச அதிபர் பணிமனை சங்கானையில் இயங்குகின்றது

(சித்தன்கேணி)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை தற்காலிகமாக சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் செவ்வாய், வியாழன் ஆகிய இரண்டு நாட்களும் இயங்கி வருகின்றது

பெரும் தொகையான காரைநகர்பகுதி மக்கள் சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, பண்ணாகம், சித்தன்கேணி ஆகிய இடங்களில் வசித்து வருகின்றனர். இவர்களின் அத்தியாவசிய தேவைகளை கவனத்தில் கொண்டு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. யோசேப் வாரத்தில் இரண்டு நாட்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபர்பணிமனையில் தனது அலுவல்களை மேற்கொண்டு வருகின்றார். இவருடைய இச்சேவையை காரைநகர்பகுதிமக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர். [137)

## வடமராட்சி கிழக்கு

# உ. அ. அ. காரியாலயம் அம்பனுக்கு இடமாற்றம்

(பருத்தித்துறை)

கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப்பகுதிகளில் நடைபெற்றுவரும்ஸ்ரீலங்காஇராணுவத்தினரின் தாக்குதல்களையடுத்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகமும், வடமராட்சிகிழக்கு ப நோ. கூ. சங்கமும் அம்பனுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பருத்தித்துறை பிரதேசசபை குடத்தனை உப அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. வடமராட்சிகிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கஎளஞ்சியப் பகுதி அம்பன் நெசவுநிலையத்திற்கும், அலுவலகம் அம்பனில் உள்ளதனியார் வீடு ஒன்றுக்கும் மாற்றப்பட்டுள்ளன. [52]

# தென்னிலங்கையில் மீண்டும் ஜே.வி.பி. தலைதூக்குகிறது

(லண்டன்)

தென்னிலங்கையில் மீண்டும் ஜே வி. பி. இயக்கம் புத்துயிர் பெற்றுள்ளதாக பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'சிறிலங்கன் மொனிற்றர்' என்ற சஞ்சிகை தெரிவித்துள்ளது.

இச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கையில்; ஜே வி. பி. யின் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க தற்போது தென்னிந்தியாவிலிருந்து ஜே. வி. பி. யை இயக்கிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சிறையிலிருந்து தப்பிய ஜெயரத்ன என்ற ஜே வி. பி. முக்கியஸ்தர் தற்போது தென்னிலங்கையில் மீண்டும் அங்கத்தவர்களைத் தீவிரமாகத் திரட்டிவருகிறார்.

கேகாலை, குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள பழைய அங்கத்தவர்கள் புதிதாக மீண்டும் ஜே வி. பி.யில் சேர்ந்துள்ளார்கள்.

அண்மையில் புதிதாகச் சேர்ந்த 50 அங்கத்தவர்களை மொனறாகலை பொலிசார் கைது செய்துள்ளதாகவும் அச் 'சஞ்சிகை' குறிப்பிட்டுள்ளது. (மா)

# மலையகப் பகுதிகளில் பொலிஸ் தீவிர சோதனை

(நுவரெலியா)

மலையகத்தில் வீதிகளில் தடைகள் போட்டு பொலிஸார் தீவிரசோதனை நடத்தி வருகிறார்கள்.

ஹற்றன், கினிகத்தென, நுவரெலியா, பொகவந்தலவா பத்தன ஆகியஇடங்களிலுள்ள பிரதான வீதிகளில் தடைகள் போட்டு வாகனங்கள் மற்றும் சந்தேகத்திற் கிடமானவர்கள் மீது தீவிர சோதனை நடத்தப்படுகிறது.

# காரைநகர் மக்களின் மாதாந்த உதவிப் பணம் சங்கானையில் வழங்கப்படுகின்றது

(சித்தன்கேணி)

காரைநகர்பகுதி மக்களின் பொதுசன மாதாந்த உதவிப் பணம் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து விநியோகிக்கப்படுகின்றது.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் காரைநகர் மக்களின் பெப்ரவரி, மார்ச்மாதங்களுக்குரிய பணம் ஊர்காவற்றுறை அரசாங்க அதிபர் திரு. கே. யோசேப்பினால் சங்கானை உதவிஅரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து தற்போது விநியோகிக்கப்படுகின்றது. (137)

# ராஜீவை கொல்வதற்கு புலிகளுக்குள் எந்தக் காரணமும் இடையாது

(லண்டன்)

ராஜீவ் காந்தி ஆட்சிக்கு வந்தால் பாதிக்கப்படுவோம் எனக் கருதியவர்களே அவரைக் கொலைசெய்திருக்கலாம் என்று புலிகளின் சார்பில் கடந்த மார்ச்சில் ராஜீவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய டாக்டர் அர்ச்சுனு சிற்றம்பலம் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளுக்கும்-ராஜீவுக்குமிடையில் எமது சந்திப்பின் பின்நல்லுறவுஏற்பட்டது. அதனுல் புலிகள் ராஜீவை கொல்வதற்கு எந்தக் காரணமும் இல்லை.

ராஜீவ் கொலையில் புலிகள் தொடர்பு என்று பொய்யான பிரசாரம் செய்து புலிகளின் பெயரைக் களங்கப்படுத்தி விட்டார்கள்.

கொலைநடந்த சில நிமிடங்களிலே புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்தார்கள் என்று பொலிசார் தெரிவித்த சந்தேகமே புலிகள் இக்கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற மாயையை ஏற்படுத்தி விட்டது.

## முன்னேறும் படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் தெரிவித்ததாக 'இந்திய வானொலி' தெரிவித்தது.

ஆனையிறவை மீட்க படையினர் மேற்கொள்ளும் பகீரதப் பிரயத்தனங்களுக்கு புலிகள் பெரும் பதிலடி கொடுத்துவருவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதேவேளை விடுதலைப்புலிகள் பல பகுதிகளிலும் தங்கள் நிலையை ஸ்திரப்படுத்திவருவதாகவும் இந்திய வானொலி தெரிவித்தது. (சி)

## புலிகள் முழுத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக 'வெரித்தாஸ் வானொலி' தெரிவித்தது.

இதனுல் இராணுவம் எதிர்பார்த்தளவு வெகு இலகுவாகவும் விரைவாகவும் முன்னேற முடியவில்லையென்றும், கடுமையான எதிர்ப்பையும் இழப்பையும் சந்தித்து மெதுவாகப் படையினர் முன்னேறுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

எப்போது இராணுவம் ஆனையிறவைப் போய்ச்சேரும் என்பதை குறிப்பிட்டுசொல்ல இயலாதெனவும் அவ்வதிகாரி கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. [பூ]

## செயலக கூட்டங்கள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 27-ம் திகதி காலை 10-00 மணிக்கு நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டமும், உலர் உணவு விநியோகம் சம்பந்தமான கூட்டமும். மாவட்ட விவசாயக்குழுக் கூட்டமும் பிற்போடப்பட்டுள்ளன என்றும் அவற்றிற்கான புதிய திகதிகள் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார். [வி!

## யாழ். தபால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச. சடாட்சரநாதன் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சகல அஞ்சல் அலுவலகங்களும் உப அஞ்சல் அலுவலகங்களும் இன்று தொடக்கம் வழமையான பொதுசன சேவைக்காக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை திறந்து வைத்து சகல அஞ்சல் கருமங்களையும் செய்தல் வேண்டும்.

இன்று வரை அமுலில் உள்ள ஊரடங்கு உத்தரவுக்கு முன்பே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்து தேங்கி கிடக்கும் தபாற்பொதிகளை பொறுப்பு அஞ்சல் அதிபர்கள் நேரடியாகப் பெற்று தபால் பட்டுவாடா செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

## புல்லாவெளி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காது போரிட்டனர்.

இந்தச் சண்டையின்போது இராணுவத்தினர் புலிகளின கடும் எதிர்ப்பைச் சமாளிக்க முடியாது தமது முயற்சியில் பின்வாங்கிச் சென்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பகுதிகளில் நேற்றும் ஹெலிகொப்டர், குண்டுவீச்சு விமானங்களின் உதவியுடன் புலிகளுடன் படையினர் மோதிக்கொண்டனர்.

இம்மோதலின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை நேற்றும், நேற்று முன்தினமும் இங்கு நடைபெற்ற மோதலில் படையினர் தரப்பில் பலர் காணுமல் போய்விட்டதாகக் தெரிய வருகிறது. (ரி-வி)

## ஆலோசனை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலதிக சில முக்கிய ஆலோசனைக்காகவேஇவர் கொழும்பு சென்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

ஆனையிறவை மீட்கும் முயற்சிக்கு மேலும் படையினரை தருவிக்கும் முகமாகவே இவர் கொழும்பு சென்றிருக்கலாமெனவும் அச்செய்தி குறிப்பிட்டுள்ளது. (சி)

## 28 வேங்கைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைளின் புகழுடம்புகள் நேற்று பண்டத்தரிப்பு ஜெசிந்தா பாடசாலையில் பிற்பகல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வீரவேங்கைகளின் புகழுடம்புக்கு நீண்ட வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தினர்.

## ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகளின வேகமான முன்னேற்றத்துக்கு உப்பளப் பாத்திகளில் கூரிய கம்பிகள் போல் படர்ந்திருக்கும் உப்புகள் சற்று தடங்கலாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இராணுவ சடலங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி இராணுவத்தினரின் சடலங்கள் இன்று மாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து அரசிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தொடர்ந்து இராணுவ சடலங்கள் புலிகளால் மீட்கப்பட்டு வருவதனுல் சடலங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (வி)

## இயக்கச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தாக்குதல்களினுல் அப்பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் தென்னை, மா, பலா போன்ற மரங்கள் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இயக்கச்சியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்த வயோதிபர் ஒருவரும், இளம் பெண் ஒருவரும் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [56)

## வவுனியாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிடையிலுள்ள இராணுவத்தினரின்ஐந்துகாவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ள தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்,

இத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இராணுவத்தினருக்கு உதவி புரிவதற்காக பிரதான முகாமிலிருந்து பாரிய வாகனங்கள் சகிதம் வந்த இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் கருவேப்பங்குளம் பகுதியில் இடைமறித்துத் தாக்கியதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ஆர். பி. ஜி. ஷெல்-6, பூஷ்ரர்-6, ரி.56-1, 303-4, மகஸின்-4, ரி. 56-2-1. அதற்குரிய மகஸின்-10, ஜே. ஆர். கைக்குண்டுகள்-2, ஐ. எம். ரவைகள்-4625, 303 ரவைகள்-747. 203 டொங்கான்-3 (வி)


## முகவர்கள் தேவை

எமது பத்திரிகையை விற்பனை செய்வதற்கு முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்கள் தேவை.

நேரில் விண்ணப்பிக்கவும்.

★ அரியாலை ★ கொய்யாத்தோட்டம்

★ பூநகரி ★ கோண்டாவில்

★ எழுதுமட்டுவாள் ★ மிருசுவில்

★ வரணி

பொதுமுகாமையாளர்

ஈழநாடு லிமிட்டெட்

த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under License Number B/189384/81

# வீரமரணமடைந்த போராளிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் வீரமரணமடைந்தவர்களில் சில போராளிகளின் பெயர் விபரம் வருமாறு:

இல்பேர்ட் (ஜோ ஜொனி திருமலை] நளினி [இ மேகலா உரும்பிராய்) எடிசன் (முருகுகுமார் திருமலை) அருள்ராஜ் (க.கலையமுதன் திருமலை) சுடரோன் (ந. ஜெகதீஸ்வரன் தெல்லிப்பழை) லோலோ (தி.முரளீதரன் புன்னாலைக்கட்டுவன்) அன்புதாஸ் மா. துஷ்யந்தன் திருமலை) கிஷோக் (தி கிருபாகரன் தெல்லிப்பழை] நிசாந்தன் (இ. நந்தகுமார் உரும்பிராய்) வரன் (ச. ரவிச்சந்திரன் யாழ்ப்பாணம்) தேவா (அ. குகதாஸ் ஏழாலை) பிலிப் [செபஸ்ரியான் றெக்ஷன் குருநகர்) ஆரமுது [த. விஜயகுமாரி மட்டக்களப்பு) கோணேஷ் (மா. தாமோதரம்பிள்ளை புத்தூர்] குயிந்தன் [சிங்கபாலவாச குருநகர்] ஆனந்தன் (நேசா அமலதாஸ், சுண்டுக்குளி) வேணு [க. பிரபா மட்டக்களப்பு) வாசன், தாசன் (முள்ளியவளை] குணு (புஷ்பராசா புதுக்குடியிருப்பு) குயிலன் (துரசிகரன் வல்வெட்டித்துறை] ஆனந்த் (கி. தவராசா கரவெட்டி) விஷ்ணு [ஜோசெப் செல்லையாதியாகு வவுனியா) டொமினிக் (அருள் ஆனந்தராஜா கிளிநொச்சி) சுந்தர நாயகி.

## தமிழகத்தில் ஹர்த்தால்

[சென்னை]

கர்நாடகத்தின் காவிரி ஆற்றுநீரை தமிழகத்திற்குவிடுமாறு நடுவர்மன்றம் அளித்த தீர்ப்பை அமுலாக்கக்கோரி 26ம் திகதி தமிழகமெங்கும் முழுநாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அனைத்துக்கட்சி மாநாட்டில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## அவசர அழைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க உறுப்பினர்கள் அனைவரையும் இன்று காலை 8-00 மணிக்கு யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக பாலம்பணிமனைக்கு சமுகம்தருமாறு கேட்கப்படுகின்றனர்;

## கவச வாகனம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழிக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுப் பகல் 10-30 மணியளவில் மேற்படி பகுதியில் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட திடீர் தாக்குதலில் இராணுவத்திரின் 'சலாடின்' கவசவாகனம் முற்ருக எரிக்கப்பட்டதுடன் அதில் வந்த இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இதேநேரம் புல்லாவெளியிலுள்ள இராணுவத்தினரின் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை 5-15 மணியளவில் நடாத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் இராணுவத்தரப்புக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினரின் சேத விபரம் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (வி)

## இராணுவம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் கூறுவதாக பி. பி. ஸி. நேற்றைய தனது ஆய்வுரையில் தெரிவித்தது.

இரண்டு மூன்று நாட்களில் விடுதலைப் புலிகளின் ஆனையிறவு முகாம் முற்றுகை ராணுவத்தால் முறியடிக்கப்பட்டுவிடும் என மூத்த இராணுவ அதிகாரிகள் கூறியதாக கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்திருந்தபோதும்ராணுவம் ஆனையிறவு முகாமிலிருந்து வெகுதொலைவிலேயே நிற்கின்றது என அந்த ஆய்வுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [பூ]

## அரசின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

லப்படுவதாக இருந்தால் சில நாட்களுக்கு முன்னரேயே ராணுவம் ஆனையிறவைஎட்டி இராணுவமுகாமைவெற்றிபெற்றிருக்கும்.

கடல் வழியாக கூடுதலான துருப்புக்கள் இறக்கப்பட்ட பகுதியை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்திருப்பதாகவும், ராணுவம் அதிகம் முன்னேறவில்லையென்றும் அந்தப் பிரமுகர் தெரிவித்துள்ளார். (பூ)

## மரண அறிவித்தல்

### திருமதி மேரி ஆன் புளொசம் [சோமசுந்தரம் [கிளி]

திருமதி மேரி ஆன் புளொசம் சோமசுந்தரம் (கிளி) அவர்கள் 22-07-1991 திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார். இவர் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாக கொண்டவரும், கச்சேரியடியில் வசிப்பவரும். திரு., திருமதி பிலிப்பையாவின் மூத்த புதல்வியும், திரு. சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், ஆன் றீஷா, ரொபின்சன் (ஜேர்மனி] ஆன் யுலிற், அன் கிறேஸ் ஹான்சன் ஆகியோரின் அன்புத்தாயாரும், இராசேந்திரம், ரெட்னம், மனோன், செல்வரெட்னம், ஜெயக்கொடி பவளம், ஜீவா (சவூதி) ஆகியோரின் அன்புச்சகோதரியும், திரு. ஜெயரத்தினத்தின் அன்பு மாமியாரும். ஜொனிலா, ஜெமீலா, சுரேக்கா, சுரேந்திரா, ராதா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 23 - 07 - 1991 இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள்.

தகவல்: செல்வரட்ணம்,

22/3, பாரதி லேன்,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி- 5021]